**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.67/2024</u>**

CNR.NO. TNTU02–005508–2024

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குரிசிலாப்பட்டு காவல் நிலையம்,
திருப்பத்தூர்.
குற்ற எண்.70/2024 ...... புகார்தாரர்

// எதிரிடை//

A1. திருப்பதி, த/பெ.மன்னன்
A2. ரவிச்சந்திரன், த/பெ.அண்ணாமலை
A3. சுரேஷ், த/பெ.சண்முகம் .....குற்றம் சாட்டப்பட்டவர்கள்

(குற்றம்சாட்டப்பட்டவர்கள் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டனர்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண். 67/2024 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | குரிசிலாப்பட்டு காவல் நிலையம், குற்ற எண்.70/2024 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச.பிரிவு.294(b), 323, 506(1) |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் விவரம் | | |
| 4 | பெயர்/தந்தை பெயர் | A1. திருப்பதி, த/பெ.மன்னன்<br>A2. ரவிச்சந்திரன், த/பெ. அண்ணாமலை<br>A3. சுரேஷ், த/பெ.சண்முகம் |
| 5 | முகவரி | தலுக்கன் வட்டம், குரிசிலாப்பட்டு கிராமம், திருப்பத்தூர் |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | |
|---|---|---|
| 6 | வயது | A1 – 37<br>A2 – 21<br>A3 – 30 |
| | **நாள்** | |
| 7 | குற்ற நிகழ்வு | 13.02.2024 |
| 8 | புகார் | 16.02.2024 |
| 9 | கைது செய்யப்பட்ட நாள் | A2 & A3 –16.02.2024 |
| 10 | எதிரிகள் பிணையில் வந்த நாள் | A1 – 27.02.2024 (Anticipatory Bail)<br>A2 & A3 – 21.02.2024 |
| 11 | வழக்கு துவங்கிய நாள் | 22.04.2025 |
| 12 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 13.03.2026 |
| 13 | தீர்ப்பு | 13.03.2026 |
| 14 | தாமதத்திற்குரிய காரணம் | -- |
| | **வழக்கின் நிலை** | |
| 15 | பிணைக்காலம் | -- |
| 16 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 02.03.2024 |
| 17 | பிரிவு 240 கு.ந.மு.வி<br>(முதல் கேள்வி) | 25.07.2024 |
| 18 | பல்வகை மனுவின் மீது<br>இந்நீதிமன்றத்தின் உத்திரவு | CMP.No.1690/2025<br>Dated.27.06.2025. |
| 19 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | |

| அரசு தரப்பு சாட்சி | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா. 1 | 22.04.2025 | 01.08.2025 |
| அ.சா. 2 | 22.04.2025 | 01.08.2025 |
| அ.சா. 3 | 22.04.2025 | 11.08.2025 |
| அ.சா. 4 | 22.04.2025 | 11.08.2025 |
| அ.சா. 5 | 23.06.2025 | 21.07.2025 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா. 6 | 18.09.2025 | 18.09.2025 |
| | | அ.சா.7 | 28.10.2025 | 28.10.2025 |
| 20 | பிரிவு 313 கு.ந.மு.வி(வினாவல்) | 01.11.2025 | | |
| 21 | தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 22 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இவ்வழக்கு கடந்த 20.03.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 13.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரிகளுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.M.நூஹூஷாகிப் அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழுங்கும்,

## தீர்ப்புரை

(1) இவ்வழக்கில் கடந்த 13.02.2024–ம் தேதி இரவு 08.30 மணிக்கு 1 முதல் 3 எதிரிகள் புகார்தாரரின் வீட்டிடம் வந்து புகார்தாரரைப் பார்த்து எனது வீட்டிற்கு எதற்கு வந்தாய் "தேவிடியா பையா" என்று திட்டியுள்ளனர். 1 மற்றும் 2–ம் எதிரிகள் புகார்தாரரை கன்னத்தின் மீது கையால் அடித்து, இருவரும் தங்களது கைகளைக் காட்டி "கொலை செய்யாமல் விடமாட்டேன்" என்று மிரட்டிவிட்டுச்சென்றுள்ளனர். எதிரிகள் மீது u/s.294(b), 323, 506(1)–இன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

(2) இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரிகள் ஆஜரானவுடன் நகல்கள் வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் வினவியபோது, எதிரிகள் அதை மறுத்ததால், அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

(3) அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான ஆவணங்களும், **எதிரிகள் தரப்பில் எ.த.சா.ஆ.1–ம்** வழக்கிற்கு ஆதாரங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(4) அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன்கீழ் வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சியம்" என்றும், அவர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினர், ஆனால் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் சாட்சிகளை முன்னிறுத்தவில்லை.

**(5) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

அ.சா.6 ராஜு கடந்த 16.02.2024 அன்று குரிசிலாப்பட்டு காவல்நிலையத்தில், பணியில் இருந்தபோது, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்று உள்நோயாளியாக சிசிக்சையில் இருந்த அ.சா.5 குமார் கொடுத்த புகார்வாக்குமூலத்தைப் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன்விசாரணையை முடித்து, எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 506(1)–ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>6) இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் u/s.294(b), 323, 506(1)–இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.</u>**

**<u>(i) அ.சா.5–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,</u>**

அ.சா.5 குமார் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். இவர் தனது நீதிமன்ற விசாரணையில், கடந்த 13.02.2024 அன்று காலை 06.30 மணிக்கு தனது மனைவி வேலை செய்துகொண்டிருந்தபோது, திருப்பதி என்பவர் தனது மனைவியை தகாத வார்த்தைகளால் திட்டி பிரச்சனை செய்ததாகவும், பின்னர் மறுநாள் இரவு 08.30 மணியளவில் வழக்கின் எதிரிகள் தனது வீட்டிடம் வந்து தகராறு செய்து தன்னை கட்டையால் தாக்கியதாகவும் பின்னர் திருப்பதி அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் தனது நெஞ்சில் குத்தியதில் தனக்கு காயம் ஏற்பட்டதால் குரிசிலாப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், அப்போது நடந்த சம்பவம் குறித்து குரிசிலாப்பட்டு போலீசாரிடம் தான் 14.02.2024 அன்று புகார் கொடுத்ததாகவும், மறுநாள் காலை 08.30 மணியளவில் தனக்கு வலி அதிகமாக இருந்ததால், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பு வழக்கின்படி அ.சா.5 திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 15.02.2024 அன்று சிகிச்சையில் இருந்தபோது புகார்வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அ.சா.5 தனது சாட்சியத்தில் 14.02.2024 அன்று



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

காவல்நிலையத்திற்கு தான் நேரடியாகச் சென்று புகார் கொடுத்ததாக கூறியுள்ளதால், அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது.

மாண்பமை உச்ச நீதிமன்றம், N.S. Madhanagopal & Anr. vs. K.Lalitha (2022 INSC 1323) என்ற வழக்கில், "Mere usage of abusive words do not constitute an offence u/s. 294(b) of Indian penal code. Instead, there must be further proof that the obscene act or utterance was made to the annoyance of others." என்று தெளிவுபடுத்தி உள்ளது.

அ.சா.5 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை சம்பவத்தின்போது குற்றமுறு மிரட்டல் செய்ததாக சாட்சியம் அளிக்காததால், இ.த.ச.பிரிவு 506(i)–இன் கீழான குற்றச்சாட்டு எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை.

எனவே, இந்த வழக்கில் இ.த.ச. பிரிவு.294(b), 506(i) இன் கீழான குற்றச்சாட்டுக்கள் எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை.

**(ii) அ.சா.5–ன் காயச்சான்றிதழைப் பரிசீலிக்கையில்,**

(I) அ.சா.7 மருத்துவர் திரு.சக்திகணேசன் தனது சாட்சியத்தில், கடந்த 15.02.2024 அன்று தான் பணியில் இருந்தபோது, குமார் என்பவர் சிகிச்சைக்காக வந்த போது, அவர் 14.02.2024 அன்று 08.30 மணிக்கு அவரை 1 பெண் மற்றும் 3 ஆண் நபர்கள் பெயர் தெரியாத ஆயுதத்தால் தாக்கியதாகக் கூறியதாகவும், அவரைப் பரிசோதித்தபோது, வயிற்றின் மேல்பகுதியில் 3செ.மீ அளவில் தையல் போடப்பட்ட காயம் இருந்ததாகவும், அதை சொற்பகாயம் என்று குறிப்பிட்டு காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.6) வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

(ii) அரசு தரப்பு வழக்கின்படி அ.சா.5–ற்கு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்குச் சென்றபோது, நெஞ்சில் இரத்தகாயம் இருந்தது நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அ.சா.7 தனது சாட்சியத்தில் அ.சா.5 மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தபோது அவருக்கு தையல்போடப்பட்ட காயம் இருந்ததாகக் கூறியுள்ளதால், மேற்படி காயமானது 1–ம் எதிரியால் தான் ஏற்படுத்தப்பட்டதா என இந்நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது.

**(iii) இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3–ன் சாட்சியங்களை பரிசீலிக்கையில்,**

(I) அ.சா.1 திருமதி.பிரபாவதி மற்றும் அ.சா.2 சரண்யா, அ.சா.3 சுதா இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளாவர்.

அ.சா.1 தனது சாட்சியத்தில் 13.02.2024 அன்று காலை 6.30 மணியளவில் 1–ம் எதிரி தங்களிடம் பிரச்சனை செய்ததாகவும், பின்னர் மறுநாள் இரவு 08.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் அ.சா.2–ன் வீட்டிடம் வந்து அதில் 1–ம் எதிரி அ.சா.5–ஐ நெஞ்சுக்குக் கீழே குத்தியதாகவும், அதனால் அவரைத் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றதாகவும், பின்னர் மறுநாள் காலை 08.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது நெஞ்சுக்குக்கீழ் இரண்டு தையல்கள் போடப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 1–ம் எதிரி அளித்துள்ள புகாரின் மூலம் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை இவரின் மூலம் எ.த.சா.ஆ.1 –ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) அ.சா.2 தனது சாட்சியத்தில் 13.02.2024 அன்று காலை 6.30 மணியளவில் 1–ம் எதிரி தங்களிடம் பிரச்சனை செய்ததாகவும், பின்னர்


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

மறுநாள் இரவு 08.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் தனது வீட்டிடம் வந்து அதில் 1–ம் எதிரி அ.சா.5–ஐ நெஞ்சுக்குக் கீழே கூர்மையான ஆயுதத்தால் குத்தியதாகவும், அதனால் அவரைத் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றதாகதவும், பின்னர் மறுநாள்காலை 08.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது நெஞ்சுக்குக் கீழ் இரண்டு தையல்கள் போடப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 தனது சாட்சியத்தில் 13.02.2024 அன்று காலை 6.30 மணியளவில் 1–ம் எதிரி தங்களிடம் பிரச்சனை செய்ததாகவும், பின்னர் மறுநாள் இரவு 08.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் அ.சா.2 வீட்டிடம் வந்து அதில் 1–ம் எதிரி அ.சா.5–ஐ நெஞ்சில் குத்தியதாகவும், அதனால் அவரைத் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றதாகவும், பின்னர் மறுநாள் காலை 08.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது நெஞ்சுக்குக்கீழ் இரண்டு தையல்கள் போடப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அ.சா.5–ஐ சிகிச்சைக்கு சேர்த்தபோதுதான் அவரது காயத்தில் தையல் போடப்பட்டதாக கூறியுள்ளதை நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(v) அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜு இவ்வழக்கில் அ.சா.5–இடம் அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலம் பெற்று, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தாயார் செய்து, அ.சா.7 மருத்துவர்


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

சக்திகணேசன் என்பவரை விசாரித்து, அ.சா.ஆ.6 காயச்சான்று பெற்று, சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று, பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து ஆவணங்களின் அடிப்படையில், எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 506(i)–இன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**7) பகுப்பாய்வு :**

அரசு தரப்பு வழக்கின்படி 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 294(b), 323, 506(1)–இன் கீழும், 3–ம் எதிரிக்கு எதிராக 294(b)–இன் கீழும் குற்றச்சாட்டின் சாராம்சம் அமைந்துள்ளது.

**(I) 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 294(b)–இன் கீழான குற்றத்தின் சாராம்சத்தைக் குறித்துப் பரிசீலிக்கையில்,**

மேற்குறிப்பிடப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பில், "Mere usage of abusive words do not constitute an offence u/s.294(b) of Indian penal code. Instead, there must be further proof that the obscene act or utterance was made to the annoyance of others." என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இந்த வழக்கிற்கு பொருந்துவதால் எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 294(b) நிரூபிக்கப்படவில்லை என்றும்,

**(ii) 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. 506(1) குறித்து பரிசீலிக்கையில்,**

அ.சா.5 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை சம்பவத்தின்போது குற்றமுறு மிரட்டல் செய்ததாக சாட்சியம் அளிக்காததால், இ.த.ச.பிரிவு



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

506(i) கீழான குற்றச்சாட்டு 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை.

**(iii) 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. 323 குறித்து பரிசீலிக்கையில்,**

மேற்குறிப்பிட்டபடி அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் மருத்துவ சாட்சியத்தின் மூலம் அ.சா.5–ற்கு நெஞ்சில் ஏற்பட்ட காயமானது 1–ம் எதிரியால்தான் ஏற்படுத்தப்பட்டது என நிரூபிக்கத் தவறியுள்ளதாலும், 2–ம் எதிரியால் அ.சா.5–ற்கு ஏற்படுத்தப்பட்ட காயம் குறித்து மருத்துவ சாட்சியம் அமையாததாலும், 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.323–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை.

எனவே அரசு தரப்பு வழக்கு குறித்து நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது. அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன் எதிரிகளை சேர்ந்தடைய வேண்டும் என்பதே இயற்கை நீதி தத்துவமாகும்.

**8) முடிவாக,**

அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 323, 506(1)–இன் கீழான குற்றச்சாட்டுக்களும், 3–ம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b)–இன் கீழான குற்றச்சாட்டும் தகுந்த சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை குற்ற



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

விசாரணை நடைமுறை சட்டப்பிரிவு.248(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு திருத்தங்களுக்குப் பிறகு 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 13–ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.II
திருப்பத்தூர்.

**<u>இணைப்பு :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| **அ.சா.1** | திருமதி.பிரபாவதி |
| **அ.சா.2** | திருமதி.சரண்யா |
| **அ.சா.3** | திருமதி.சுதா |
| **அ.சா.4** | திரு.தருமன் |
| **அ.சா.5** | திரு.குமார் |
| **அ.சா.6** | திரு.ராஜூ |
| **அ.சா.7** | திரு.சக்திகணேசன் |

**<u>அரசு தரப்பு சாட்சி ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| **அ.சா.ஆ.2** | புகார்வாக்குமூலம் |
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகஜர் |
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.6** | காயச்சான்றிதழ் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சான்று ஆவணங்கள்**

| | |
|---|---|
| **எ.த.சா.ஆ.1** | முதல் தகவல் அறிக்கை |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்று பொருட்கள் – இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.II
திருப்பத்தூர்.

**குறிப்பு.**

1. சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணை சமயம் எதிரிகள் பிணையில் இருந்தனர்
3. வழக்கின் முடிவு பற்றி சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.
4. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

//உண்மை நகல்//

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.II

திருப்பத்தூர்.